சென்னையில் தங்குவதற்கு வசதியான இடம்

★

உங்களுடைய சேவைக்கும் திருப்திக்கும்
தகுதியான இடம்

★

இந்தியாவிலேயே மிகப் பெரியதும் உங்களுடைய
பூர்ண திருப்தியும் வாழ்த்தையும் பெற்றது

ஹோட்டல் எவரெஸ்ட்

(சென்டிரல், எழும்பூர் மத்தியில், பஸ், டிராம்
நிற்குமிடத்தில், கார்ப்பரேஷன் எதிரில்)

பார்க்டவுன் :: மதராஸ்-3.

புரோப்ரைட்டர்:

கலைவள்ளல் எஸ். கே. சுந்தரம்.

சிவமயம்.

கா. முருகப்பன்.

V. PR.
THA...

சொல்லமுதம்

★

தொகுப்பாளன்:

"நேசி"

...ED BY:
V. PR. PL. K.
PAGANERI.
CHETTIARS' TAMIL AS...
YOUNG MEN
PAGANERI

நன்னெறிப் பதிப்பகம்

நேமத்தான்பட்டி :: செட்டிநாடு, S. I. R.

விலை அணா எட்டு

வாழ்த்து.

உண்மையே தூணாய், உறுதியே மத்தாக,

நுண்மதியைத் தாம்பாக்கி நூற்கடலை—வண்மையொடு,

மத்திட்டுச் சொல்லமுதம் நல்கு சிதம்பரனார்

நித்தனரு ளால்நீடு வாழி!

அன்பன்,

வேலவன்.

V. PR. PL. ... NATHAN
CHETTIAR TO
THIRUVALLUVA LIBRARY PAGANERI

நூற்பயன்.

பலாப் பழத்துக்கு ஈப்பிடித்து விடவேண்டியதில்லை. அமுதத்தை யாரும் விரும்புவார்கள். அமுதம் உடற்பிணி யகற்றும். அதைப்போல இந்நூலிலுள்ள அமுத மொழிகளை வாசித்துக் கருத்தறிந்தவர்கள் மனப்பிணி அகலும். அமுதம் தரும் யாரையும் மெச்சவேண்டியதே.

சொல்லமுதம் தொகுப்பாளர் "நேசி" அவர்களைத் தமிழ் உலகம் அதிலும் குறிப்பாக அறிஞர் வட்டாரம் நன்கறியும். அவர் தனக்கென வாழாப் பேரறிஞர்: தூய வாழ்க்கை நடத்துபவர். அதனாற் பயன் கண்டவர். தான் கண்ட இன்பம் இவ்வையகம் காணவேண்டுமென்ற அவாவினால் இந்நூலைத் தொகுத்து நமக்களித்திருக்கிறார். அதற்கு நன்றி செலுத்துவதுடன் மேன்மேலும் இப்பணியிலூக்கமளிக்க இறைவனை வேண்டுகிறேன்.

"பொற்குமரன்"

PAGANERI

கனவு பலித்தது.

★

அன்பின் சிகரம் புத்தர் பெருமான், அருள் வடிவம் இயேசுநாதர், கரும வீரர் விவேகானந்தர், அஹிம்சை வழி காட்டி காந்தியடிகள் இன்னும் பிறநாட்டறிஞர்கள், இவர்கள் போன்றோரின் அருள் வாக்குகளைக் கேட்டு நம் நாட்டவர் அதனாற் பயன்பெற வேண்டுமென்பது அடியேனின் நெடுநாட் பிரார்த்தனை.

பெரியார்களின் உபதேசங்கள் முத்துக்களை ஒக்கும். அவைகளிலும் நன்முத்துக்களாகப் பொறுக்கி எடுத்து மாலை கட்டி எழில்த் தமிழ் அணங்குக்கு அணிவித்து மகிழ விரும்பினேன். அதனால் ஏற்பட்ட ஊக்கம் பலவித இன்னல்களைப் பின்னே தள்ளி என்னை முன்னேறச் செய்தது. இவ்விதம் திரட்டிய பொன்மொழிகள் **சொல்லமுதமாக** உருவாக்கப் பெற்றதன்மூலம் என் நெடுநாளையக் **கனவு பலித்தது.** இம்முயற்சி மேன்மேலும் வெற்றி அளிக்க பெருமக்களின் ஆசியையும் ஆதரவையும் வேண்டுகின்றேன்.

நேமத்தான்பட்டி
28-12-1950.

அன்பின் செல்வன்,
"நேசி"

உலகெலாம் வாழ்க!

சமர்ப்பணம்.

'கலைவாணர்'

திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு,

முந்தும் மதுர முறுவாழ்வும் சீரும்
பெருந்தும் பெருந்தகையும் சேரும்—மருகரே!
செல்வியென் **சொல்லமுதம்** *என்னுமுதற் சேயிழையை*
நல்கினேன் இன்றுமக்கே நான்!

இங்ஙனம்,

நன்னெறிப் பதிப்பகம்.

வெற்றிக்குச் சிறந்த வழி!

★

உலக பாஷையாகிய ஆங்கில மொழியை ஆறு மாதங்களில் சுலபமாக எழுதவும், வாசிக்கவும் விரும்புகிறீர்களா? மாதம் இரு பாடங்களாக ஆறு மாதங்களில் கற்பிக்கப்படும். சுமாராகத் தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும். ஆங்கில எழுத்து முதல் தந்தி எழுதும்வரை ஆங்கிலப் பாடங்கள் தபால் மூலமாக நடைபெறும். இடையிடையே பரீட்சைகளும் தபால் மூலமாக நடைபெறும். விபரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

காரியதரிசி,

ஆங்கில ஆரம்ப நிலையம்,

ஆ. தெக்கூர்,

இராமநாதபுரம் ஜில்லா.

★

சொல்லமுதம்

★

உடலை வளர்க்க உணவு வேண்டும்; அப்படியே உயிரை வளர்க்கப் பிரார்த்தனை வேண்டும்.

— காந்தியடிகள்

தூய மனத்தோடு செய்யப்படும் பிரார்த்தனை கடவுளால் வரவேற்கப்படும்.

— இரவீந்திரநாத தாகூர்

எவன் மனத்தில் அன்பு குடிகொண்டு இருக்கிறதோ, அவன் மனத்திலேதான் ஆண்டவன் குடியிருக்கிறான்.

— குரு நானக்

அன்பு ஒன்றே ஆண்டவனை அடையும்படி செய்யும்.

— இரவீந்திரநாத தாகூர்

அன்பு ஒன்றே ஆண்டவனைக் காட்டும்.

— இயேசுநாதர்

நீங்கள் அன்புகனிந்த மனமுடையவர்களாய் இருங்கள்.

— முகமது நபி

ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை இனிதே

— விளம்பி நாயனார்

மனிதன் தன்னைப்போன்ற உயிர்களின் மாமிசத்தைத் தின்று உடலை வளர்ப்பது அடாது.

— காந்தியடிகள்

அன்பை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்கமே மதம் எனப்படும்.

— இராமகிருஷ்ணர்

அன்பு நெறியால் உலகம் பிழைக்க வழிகூறும் முறையே மதம் எனப்படும்.

— விவேகானந்தர்

உயிர் என்னும் மரத்துக்கு ஆணிவேர் அன்பே ஆகும்; உயிர்களை நேசிப்பதே உன் உயிரை வளர்ப்பதாகும்.

— இயேசுநாதர்

நாம் சிரிக்காத நாள் வீண் நாளே.

— சாம் குபா

எனக்கு உண்டான நோயின் துன்பங்களை எல்லாம் நான் மகிழ்ச்சியினாலேயே கடந்துவிட்டேன்.

— டார்வின்

சிரித்தால் மனம் தெளியும்; நோய் நொடிகள் சீக்கிரம் ஓடிவிடும்; சிரிப்புக்கு செலவில்லை; சிரிப்பினால் அழகு ஏற்படும்.

— 'கலைவாணர்' என். எஸ். கே.

பத்திரிகை வாசிப்பதை உன் ஒரு நாளைய வேலைகளில் ஒன்றாகக்கொள்.

— காந்தியடிகள்

தினந்தோறும் பத்திரிகை வாசிப்பதால், தாய் நாட்டு நிலைமையையும், பிற நாடுகளின் நிலைமையையும் தெரிந்துகொள்ளலாம்; நமது அறிவும் பெருகும்.

— இராமானந்த சட்டர்ஜி

உலகச் செய்திகளை அறிவது கல்வியின் ஓர் அமிசம்.

— A. S. சர்மா

தூய்மை உடையவன் கடவுளை மிக நெருங்கியவன் ஆகிறான்.

— விவேகானந்தர்

தூய்மை என்பது கடவுள் தன்மைக்கு அடுத்த படியாகும்.

— ஓர் ஆங்கிலப் பழமொழி

பிறரிடம் அருள் உடையவன் ஆண்டவன் அருளுக்குப் பாத்திரன் ஆவன்.

— இயேசுநாதர்

அருள் உடையவர் ஆண்டவனை நெருங்கியவராவர்.

— அரிஸ்டாட்டில்

தன் தாய் நாட்டினிடம் அன்பு காட்டாதவன் எதனிடமும் அன்பு காட்டான்.

— பைரன்

தாய்நாடே உங்கள் உயிர்; தாய் நாடு வாழ்ந்தாற்றான் நீங்களும் வாழ்ந்தவர்கள் ஆவீர்கள்.

— காந்தியடிகள்

தாய்நாட்டுக்குத் தொண்டு புரியுங்கள்; நமது தாய்நாடு பூலோக சுவர்க்கமாகும்.

— சரோஜனி தேவியார்

ஒன்றே குலம், ஒருவனே தேவன்.

— திருமூலர்

எல்லா மதங்களிலும் ஒளிர்பவன் ஒருவனே.

— இரவிந்திரநாத தாகூர்

நோன்பினுல் நோயை விரட்டலாம்.

— காந்தியடிகள்

நோன்பு இருத்தலால் ஜீரணக் கருவிகள் போதிய ஓய்வைப் பெற்று நல்ல நிலையை அடையும்; இரத்த ஓட்டம் பலப்படும்.

— டாக்டர் முத்து

காப்பவன் அரசனுவானே அன்றி, ஆள்பவன் அரசன் ஆகான்.

— கம்பர்

அரசன் பொதுமக்களுக்கு ஊழியனே ஆவன். மக்களின் இன்ப துன்பங்கள் அரசனுக்கும் உரியவை.

— இரவீந்திரநாத தாகூர்

சேவா சாதனத்தால் பெண்களின் வாழ்க்கை பெருமை அடைகிறது.

— காந்தியடிகள்

சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே மனிதர்களில் சிறந்தவன்.

— ஜேம்ஸ் ஆலன்

நீ எந்நிலையில் இருப்பினும் சரியே; சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள்; நீ உயர்வடைவாய்.

— தாமஸ் கார்லைல்

கேட்பவன் கொடுக்கப்படுவான்.

— இயேசுநாதர்

தன்னம்பிக்கையோடு முயற்சி செய். வெற்றி உன்னுடையதே ஆகும்.

— ஜேம்ஸ் ஆலன்

மனிதர்களிடம் காட்டும் இரக்கத்தையே பிராணிகளிடத்திலும் செலுத்தவேண்டும். அதுவே ஜீவ காருண்யம் எனப்படும்.

— புத்த மகான்

பிராணிகளிடம் இரக்கம் காட்டுவதே உண்மை மனிதனது ஒழுக்கமாகும்.

— டார்வின்

ஒருவன் குரோதத்தை வென்று அதற்குக் காரணமான அறியாமையை அகல ஓட்டி, பிறரிடம் தீமையைக் கவனியாதிருக்கும் நிலையே ஆனந்தநிலை எனப்படும்.

— ஜேம்ஸ் ஆலன்

தான் செய்யும் ஒவ்வொரு செயலும் நன்மையா தீமையா என்பதை ஆராய்ந்து பார்த்து, நன்மைசெய்பவனே ஆனந்த நிலை அடைபவன் ஆவன்.

— காந்தியடிகள்

உலக மக்களோடு சேர்ந்து, நீ உலக வாழ்வில் கலந்துகொள்; ஆனால், கடவுளிடத்தில் பற்றோடு நிற்பதை மறவாதே.

— ஞானேஸ்வரர்

வாழ்க்கை கூட்டுறவுக்கென உண்டானதே அன்றித் தனிமைக்கு அன்று.

— வில்லியம் வேட்ஸ் வொர்த்

உண்மையே கடவுள்.

— காந்தியடிகள்

உண்மையே யாவற்றையும் வெல்லும்.

— உபநிடதங்கள்

சுயநலம் இல்லாதவனே நாட்டுச் சேவை செய்யத் தகுந்தவன்.

— காந்தியடிகள்

சுயநலம் உள்ளவன் மனிதன் ஆகான். அவனால் சமூகத்துக்குப் பெருத்த கேடு விளையும்.

— முசோலினி

வீரம் இல்லாதவன் மனிதன் ஆகான்.

— நெப்போலியன்

வீரம் இல்லாத மக்களைப் பெற்ற நாடு அடிமை நாடாகவே இருக்கும்.

— முசோலினி

உறுதியுடைய மனமே கலங்கா உள்ளம் எனப்படும்.

— எமர்சன்

வாழ்க்கையில் வெற்றிமேல் வெற்றியடைவதற்கு உறுதியுடைய மனமே தேவையானது.

— மார்டன்

நாம் எதனை விதைக்கிறோமோ, அதனையே விளைவாக அனுபவிப்போம்.

— ஓர் ஆங்கிலப் பழமொழி

நீ நன்மை செய்தால், நன்மை பெறுவாய், தீமை செய்தால், தீமை பெறுவாய்.

— ஜேர்ஸ் ஆலன்

இயலாது என்பது என் அகராதியில் இல்லை.

— நெப்போலியன்

எதையும் யோசித்துச்செய்பவன் நல்ல நிலையை அடைவான்.

— ஹென்றிபோர்ட்

காலத்தின் விலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது, உன்னையே நீயே கொலை செய்துகொள்ளுவதைப்போலாம்.

— ஜேர்ஸ் ஆலன்

மார்க்கம் சன்மார்க்கமே அன்றி மற்றொன்றில்லை.

— திருமூலர்

தைரியத்துடனும், உண்மையுடனும், சிரத்தையுடனும் சன்மார்க்கத்தைப் பின்பற்றிச்செல். நீ பரிபூரணத் தன்மையை அடைவது நிச்சயம்.

— விவேகானந்த அடிகள்

பெரும்பாலான மக்கள் பிதற்றிப் பின்பற்றி வரும் அறநெறிகள் என்பன, போலிப் புகழ்பெற்ற மருந்துகட்குச் சமமாகும். அவற்றால் நன்மை அணு வளவும் உண்டாகாது.

— பிரெடெரிக் நியேஷன்

ஒரு மனிதனுடைய வாழ்நாளில் சிறந்தது இளமைப் பருவமே. அப்பருவத்தில் கொள்ளும் பழக்க வழக்கங்களே இறுதிவரை நீடித்திருப்பன.

— ஜான் ரஸ்கின்

கல் போன்ற அண்டமும், அன்பினால் ஊடுருவப் படும். அன்புள்ளவன் கண் இழந்தவனாயினும், எங்கும் பார்க்கும் வல்லமை அவனுக்கு உண்டு. அவன் துன்பத்தையும், இன்பத்தையும் அன்பினால் ஒன்றுபடுத்துகிறான்.

— எமர்சன்

அழகுள்ள பொருள்என்றும் இடையறா இன்பத்தை அளிக்கும்.

— கீட்ஸ்

நீ தனியே இருக்கும்போது இயற்கையழகு உன்னைத் தன்பால் இழுப்பதை அறிவதில்லையோ?

— எமர்சன்

சிக்கனம் இருந்தால், யாரும் செல்வராக முடியும்.

— ஜான்சன்

சிக்கனத்தோடு வாழ்தல் நாட்டு முன்னேற்றத்துக்கு நன்மையைப் பயக்கும்.

— பண்டித மாளவியா

கவி நிறைந்த நூல் இன்ப மயமன்றே!

— உமார்கயம்

எனக்கு இன்பமளிக்கும் நண்பர்களென்றே நூல்களைக் கூறுவேன்.

— மாண்டெய்ன்

நூல், சென்ற கால உலகிற்கும், ஏனைய உலகங்கட்கும் நம்மைத் தூக்கிச்செல்லுமொரு மாயக்கருவி என்னலாம்.

— அனடோல் பிரான்ஸ்

ஒவ்வொரு மணியிலும் ஆரம்பித்து முடியும் எல்லாச் சாதாரணச் சம்பவங்களும் பிறவும் நம்மை மேலே கொண்டுபோகத் தக்கவையே. ஆனால், தொடக்கம் சரியானதாயிருத்தல் வேண்டும்.

— லாங் பெல்லோ

ஓர் ஆரம்ப உணர்ச்சியின் தன்மையே அதன் பலன்களின் தன்மையை எப்போதும் ஏற்படுத்தும்.

— ஜேம்ஸ் ஆலன்

நன்மை தீமைகளை வேறுபாடு தோன்றப் பகுத்துக்கூறும் உள்ளுணர்ச்சியே மனச்சாட்சி என்பது

— விவேகானந்த அடிகள்

மனச்சாட்சி வகுத்துரைக்கும் வழியே நடப்பவன் முடிவற்ற இன்ப நிலையை அடைவான்.

— ஜான் ரஸ்கின்

இந்தியாவின் வறுமை ஒழியவேண்டுமாயின், கிராமச் சீர்திருத்தம் வேண்டும்.

— காந்தியடிகள்

கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றத்துக்கு அடிப்படையாகும்.

— சர். விஸ்வேஸ்வரையா

உடற்பயிற்சியால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

— சாண்டோ லெ. சோமசுந்தரம்

இந்தியர்களே என் சகோதரர்கள்; அவர்களே என் உயிர்.

இந்திய ஜன சமூகமே நான் பிறந்து வளர்ந்த தொட்டில்; என் இளமையின் இன்பப் பூங்கா; என் மூப்பின் தவச்சாலை.

இந்திய நிலமே எனது சுவர்க்கம்; இந்தியாவின் நலனே என் நலன். இதை முன்னுக்குக் கொண்டு வருதலே எனது முதற்கடமையாகும்.

— விவேகானந்த அடிகள்

ஒரு நாடு முன்னேற்றம் பெற, அந்நாட்டுப் பெண்மக்கள் முதலில் முன்னேற்றம் பெறவேண்டும்

— ஜான்சன்

உலக விருத்திக்குக் காரணமான புலவர்கள்—மகான்கள்—வீரர்கள் இவர்களைப் பெற்று வளர்ப்பவர் பெண்டிரே. ஆகலின், பெண்டிர் உலகம் பெரிதும் முன்னேறல் வேண்டும். பெண்டிர் முன்

னேற்றத்துக்கு உழைப்பதே ஒரு பெரு நெறியாம்.

— இரவீந்திரநாத தாகூர்

இசைக்கு உருகாதார் எவரும் இல்லை.

— டாக்டர். உ. வே சாமிநாதையர்

அடிமைத்தனத்தை அகற்ற என் ஆருயிரையும் நான் அர்ப்பணஞ்செய்யத் துணிந்துள்ளேன்.

— வில்லியம் லாயிட் காரிசன்

அடிமைத்தனத்தைவிடக் கொடியதொன்று மனித சமூகத்தில் இல்லை என்னலாம். அதனை நான் அகற்றியே தீருவேன்.

— ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்கர் அறச்செயலைக் கண்டும் நம் தாய் நாட்டுச் செல்வந்தர் அவர்களைப் பின்பற்றாதது வருந்தத்தக்கதே.

— ஜே. எம். குமரப்பா

நாம் வாழ்க்கையில் உயர்வடையவேண்டுமாயின், பெருமக்களின் வரலாறுகளைப் படித்து அவர்களைப் போல நடக்கப் பயிலல் வேண்டும்.

— ஜான் ரஸ்கின்

அற்பமாகத் தோன்றுவதை அற்பமாகக் கருதும் அறிவிலி, இவ்வுலகில் அழிந்துவிடுவான்.

— சாலமன்

சிறிய காரியங்களில் கவலை இருந்தாற்றான் பெரிய காரியங்களிலும் கவலை பிறக்கும்.

— மார்டின் லூதர்

எவ்விடத்தில் உண்மையும் உழைப்பும் இருக்கின்றனவோ, அவ்விடத்தில் இறைவன் விளங்குகின்றான்.

— இரவீந்திரநாத தாகூர்

தூய்மை, எளிமையினின்றும் ஒழுங்கினின்றும் தோன்றுவதாகும்.

— எமியல்

தூய்மை எனினும் சுத்தம் எனினும் ஒன்றே. அழகை விரும்புவோன் தூய்மை உடையவனாயிருப்பான்.

— ஜேம்ஸ் ஆலன்

நமது தாய்நாட்டின் பண்டைப் பெருமைக்குக் குருகுலங்களே முழுமுதற் காரணம் என்று சிறிதும் அஞ்சாது கூறுவேன்.

— இரவீந்திரநாத தாகூர்

பகைவரையும் சகோதரரெனக் கருதி நேசிக்கவும், சீவகாருண்யம் ததும்பவும், தன்னடக்கம் பெறவும், அறிவும் ஒழுக்கமும் சிறக்கவும் குருகுலங்கள் தேவையானவை.

— காந்தியடிகள்

ஜன சமூகத்துக்கு உழைக்க ஆவல் கொண்டவனே! அந்த வேலையை உன் வீட்டில் ஆரம்பம்செய்; உனக்கும், உன் மனைவிமக்களுக்கும், அண்டை வீட்டுக்காரர்க்கும் உதவிசெய். வீணாய் மயங்காதே. அருகில் உள்ள ஒன்றைச் செம்மையாய்ச் செய்யாத நீ, தூரத்தில் உள்ள ஒன்றைச் செய்வதெங்ஙனம்?

— ஜேம்ஸ் ஆலன்

சாதி மத பேதமற்று, உயர்வு தாழ்வு என்னும் வேறுபாடற்று, ஒழுக்க நெறியில் நடைபெறும் வாழ்க்கையே உயர்நிலை எய்தியதாகும்.

— **தயானந்த சரஸ்வதி**

சமத்துவமும், சகோதரத்வமும் கொண்டு ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்துதலே பிறப்பின் சிறந்த இலட்சியமாகும்.

— **காந்தியடிகள்**

தன்னம்பிக்கை இருந்தால், மீட்சி உண்டு.

— **விவேகானந்த அடிகள்**

உனது அறிவை விருத்திசெய்; உன் தீர்மானத்தில் நம்பிக்கைவை. அதுவே உன் நண்பனாக இருக்கட்டும்; நீ முன்னேற்றமடைவாய்.

— **டாக்டர் மாடேர்ன்.**

உலகமெங்கும் நிறைந்திலங்கும் பொருளைத் தரிசிக்க விரும்பின், ஒருவன் மக்கட் படைப்பில் மிகக் கடையானவனிடத்தும் அன்பு செலுத்தக்கூடியவனாயிருத்தல்வேண்டும்.

— **காந்தியடிகள்**

நமது தினசரி வாழ்வில் சாதி, மத, சமூகப் பாகுபாடுகளை உறுத்திக் காட்டும் எச்செயலையும் செய்யலாகாது. யாவரும் ஒரே குடும்பத்தினராயிருத்தல் வேண்டும்.

— **சரோஜனி தேவியார்.**

இந்தியர் கோழைகள் அல்லர்; தாழ்ந்தவர் அல்லர்; எங்கள் முன்னோர் நாகரிகம் அற்றிருந்த காலத்தில் இந்தியா பொன்னுடாக விளங்கியது; இந்தியர் தேவர்களாக விளங்கினர்; இந்தியா செல்வத்தைப் பொழிந்துகொண்டிருந்தது.

— எட்மண்ட் பர்க்.

எனது தாய் நாட்டிற் பிறந்த எறும்பும் என் சகோதரனே. அதன் இன்ப துன்பங்கள் எனக்கு நேரும் இன்பதுன்பங்களேயாகும்.

— விவேகானந்த அடிகள்

செல்வம், அழகு, உண்மை, தூய்மை முதலியவற்ருல் நிறைந்து பூலோக சுவர்க்கம் எனக் கொண்டாடத்தக்க நாடு எதுவென்று என்னைக் கேட்பின், இந்தியா என்று யான் சுட்டிக் காட்டுவேன்.

— மாக்ஸ் முல்லர்.

உன் சொந்தவேலை எதுவாயினுஞ்சரி; அதைச் செய்ய நீ சிறிதும் வெட்கப்படலாகாது.

— ஈஸ்வர சந்திரவித்தியாசாகரர்.

மனிதன் தன் போன்ற உயிர்கட்குத் தொண்டு செய்தலே சிறந்தது.

— பீக்கன் அம்மையார்.

சமூகத் தொண்டு புரியுங்கள்; சமூகத்தை உயர்த்துங்கள்.

— பூகர் வாஷிங்டன்.

சிறந்த ஒழுக்கமே மனிதனின் இலட்சியமாகும்.

— காந்தியடிகள்

ஒழுக்கம் உள்ளவனே மனிதன் எனப்படுவான்.

— ரோமெய்ன் ரோலண்டு.

நாம் நித்திரையின் காலத்தையும் தூங்கும் தன்மையையும் சீர்படுத்துவதில் நமது எதிர்கால ஜீவியம் அடங்கி உள்ளது.

— டோனல்டு ஏ. லேயர்டு.

தன்னைத்தான் முன்னேற்றுகின்ற ஒருவன், தன்நாட்டையும் முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வருபவனாகின்றான்.

— பண்டித மாளவியா

அறிவுள்ளவன் முன்னேற்றம் அடைகின்றான்.

— இரவீந்திரநாத தாகூர்.

உழைப்பினால் ஒருவன் உயர்வடைகின்றானே அன்றிப் பிறப்பினால் இல்லை.

— சர். பி. சி. ரே.

நண்பன் என்பவன் நம் குறைகளைப் பொறுப்பவனாக இருத்தல் வேண்டும்.

— ஷேக்ஸ்பியர்

நண்பன் இரண்டு உடம்புகளில் ஓர் ஆன்மா போன்றவன்.

— அரிஸ்டாட்டில்

நண்பனை இழக்காதிருக்க அவனுக்கு நன்மை செய்; பகைவனை நண்பனாக்க அவனுக்கு நன்மை செய்.

— பிராங்லின்.

நண்பர்களைப் பெறு; நீ கைகளையும் செல்வத்தையும் பெற்றவனாவாய்.

— பர்லே

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாக தலையால் நடப்பதை யொக்கும்.

— எமர்சன்

உன்னுடைய விதியை உன்னுடைய நம்பிக்கையால் வெற்றிகொள்.

— நெப்போலியன்

கடற்கரையில் உடைந்து கிடக்கும் மரக்கலங்கள் போன்று காலமென்னும் அலைகளால் சிதறடிக்கப்பட்ட மனிதர்களை நாம் பார்க்கின்றோம். அவர்கள் சிறந்த திறமைசாலிகளாகத்தான் இருந்தார்கள். ஆயினும் துணிவும் தன்னம்பிக்கையும் ஒரு முடிவுக்குவரும் சக்தியும் இல்லாததினால் அவர்கள் வெற்றிபெற முடியவில்லை.

— பாஸ்டர்

தோற்றுவிட்டேனென்று நீ கருதுவாயானால் நீ நிச்சயமாகத் தோற்றவனே. உன்னால் ஒரு காரியத்தையும் செய்யமுடியாது என்று நீ நினைப்பாயா

னால் அக்காரியத்தை நீ ஒருக்காலும் செய்யமுடியாது. நீ வெற்றிபெற விரும்பி அதே சமயத்தில் நம்மால் முடியாது என்று நினைப்பாயானால் நீ வெற்றிபெற மாட்டாய் என்பதின் அடையாளமே அது. வாழ்க்கைப்போர் பலவானுக்கோ அல்லது வேகமாகச் செல்பவனுக்கோ சாதகமாக முடிவதில்லை. ஆனால் சீக்கிரமோ அல்லது தாமதித்தோ எப்படியும் வெற்றி பெறுபவன் யாரெனில் என்னால் முடியும் என்று எண்ணுகின்றவன் தான்.

— ஒரு ஆங்கிலக் கவி

தன்னையே மதித்து தன்னையே பின் தொடர்ந்து செல்லும் எந்த சமுதாயமும் வாழ்வடையும்.

— நெப்போலியன்

மனிதனை அணி செய்யும் குணங்களில் பிரதானமானது தைரியம்.

— டேனியல் வெப்ஸ்டர்

நீ எண்ணித் துணிந்தபின் உன்னை உலக முழுதும் வாளெடுத்து எதிர்த்து நின்றபோதிலும் கொண்ட கருமத்தை கைவிடாதே.

— விவேகானந்த அடிகள்

மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர்வாழத் தகுதியுடையவர்கள்.

— மெக் ஆர்தர்

பயம் என்பது அறியாமையாலும், சலன புத்தியாலும் ஏற்படுகிறது.

— புரொபஸர் ராபின்சன்

பயமென்னும் கண்களுடன் வருங்காலத்தை நீ பார்க்கவேண்டாம்.

— ஹாரிமன்

ஆபத்தும், கஷ்டங்களும் ஏற்படவும் வேண்டும். அதை வெல்லவும் வேண்டும். அது ஆண் மகனுக்கு அழகு.

— ஔரங்கஜீப்

நான் ஒரு அடியெடுத்து வைப்பதற்கு முன்னால் இரண்டடி திரும்பிப் பார்ப்பேன்.

— நெப்போலியன்

திடமான எண்ணத்தைவிட அருமைசால் குணம் வேறொன்றுமில்லை.

—தியேடர் ரூஸ்வெல்ட்

அறிஞர்களுக்கு வாழ்க்கை ஒரு திருநாள்.

— எமர்சன்

தவறுகளை ஒத்துக்கொள்ளும் தைரியமும், அவைகளை விரைவில் திருத்திக்கொள்வதற்கான தைரியமும்தான் மிகவும் முக்கியமான விஷயங்களாகும்.

— ஸ்டாலின்

யார் நம்முடன் போராடுகின்றாரோ அவன் நம்முடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுகின்றான். நம்முடைய திறமையைக் கூர்மைப்படுத்துகின்றான். ஆதலின் நமது எதிரியே நமக்கு உதவி செய்பவன்.

— எட்மண்ட் பர்க்

கஷ்ட சாத்தியம் என்பதை என் காலின் கீழ் வைத்து மிதித்து வெற்றி கொள்வேன்.

— சாத்தாம் பிரபு

முயற்சி செய்யும் ஆன்மாவை நோக்கி அமரர்கள் நெருங்கி வருகின்றார்கள்.

— ஸோராஸ்டர்

எச்சமயத்திலும் என் மனம் தளர நான் அனுமதிப்பதில்லை; எக்காரியத்தைச் சாதிப்பதற்கும் குன்றா உழைப்பு; குறையா முயற்சி, கூரிய புத்தி ஆகிய மூன்று விஷயங்கள் மிகவும் வேண்டற்பாலன.

— எடிஸன்

நான் வாழ்க்கையில் வெற்றி பெற்றதன் ரகசியம் என்னவென்றால் நான் மக்கள்மீது அன்பு வைத்ததுதான்.

— எர்னஸ்டைன் ஷூமான்ஹெய்ங்

உனக்கு இன்னல் செய்தோர்களையும் இடுக்கண் விளைவித்தோர்களையும் மனப்பூர்வமாக மன்னிப்பாயாக.

— அல்டோஸ் ஹக்ஸ்லி

எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிகின்றதோ அவனையே நான் மகாத்மா என்பேன்.

— விவேகானந்த அடிகள்

நான் பிறப்பைப் பற்றி பேசுவதென்றால் அவர்களின் நல்ல குணங்களை எடுத்துரைப்பேனேயன்றி குறைகளை ஒருபோதும் கூறுவதில்லை.

— பெஞ்சமின் பிராங்ளின்

ஒரு பெரிய மனிதன் தன்னுடைய பெருந்தன்மையைச் சிறிய மனிதர்களை நடத்துவதன்மூலம் காண்பிக்கிறான்.

— கார்லைல்

எனக்குத் தெரிந்தது ஒரேயொரு விஷயம் தான். அது என்னவென்றால் எனக்கும் ஒன்றுமே தெரியாது என்பதுதான்.

— சாக்ரடீஸ்

ஒரு சொட்டுத் தேனானது ஒரு அந்தர் விஷத்தைவிட அதிகமாக ஈக்களை இழுக்கக்கூடியது.

— லிங்கன்

என்னுடைய புன்முறுவலானது பத்து லக்ஷம் டாலர் மதிப்புடையது.

— சார்லஸ் ஸ்வாப்

காமாலை நோயாளிக்குத் தேன் கசக்கும். வெறி நாய் கடித்தவர்களுக்கு நீரைக் கண்டால் பயம். சிறு குழந்தைகள் கேவலம் ஒரு பந்தை வெகு அழகென்று நினைப்பார்கள். பித்த விஷத்தைக் காட்டிலும், நாய் கடித்த விஷத்தைக் காட்டிலும் அறியாமை என்னும் விஷத்தின் வேகம் குறைவா? அதன் காரணத்தினால்தானே மனிதன்

தவறான எண்ணம் கொள்ளுகிறான்? நான் அவனைக் கண்டு சினம் கொள்ளலாமா?

— மார்க்கஸ் ஔரேலியஸ்

மண வாழ்க்கையிலே ஏற்படும் ஒரே ஒரு தொல்லை இதுதான்—ஒவ்வொரு பெண்ணும் தாயுள்ளம் பெற்றிருக்கிறாள்; ஒவ்வொரு ஆணும் பிரம்மசாரி மனம் பெற்றிருக்கிறான்.

— இ. வி. லூக்காஸ்

ஒரு பொருளைக் காதலிக்கும் இருவர் தோழராகமாட்டார்கள். ஒரே பொருளிடம் பகைமை கொள்ளும் இருவரே எப்போதும் தோழர்களாவார்கள்.

— ஹவார்டு ஸ்பிரிங்

நம்மைக் கேட்போரும் பார்ப்போரும் ஆண்டவனைப் புகழவேண்டும். உலகத்தாரிடையே நாம் அப்படி வாழவேண்டும். 'சமாதானம், சமாதானம்' என்று உரக்கக் கத்துகிறீர்கள். ஆனால் அந்தச் சமாதானம் உங்கள் இருதயத்திலே இருக்கவேண்டும். யாரும் ஆத்திரமடையவோ பழி சொல்லவோ இடம் தராதீர்கள். உங்களது சாந்த குணத்திலே, சகலரும் சாந்தியும் இசையும் நல்லெண்ணமும் கொண்டு வாழ வழி காட்டுங்கள்.

— ஸெயிண்ட் பிரான்ஸிஸ்

பணம் இப்போது எங்கும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் பணம், தானே பிரயோசனப்பட்டுவிடாது. நமக்குத் தேவையான பொருள்களை

அடைவதற்குத்தான், பணம் உதவி புரிகிறது. நாம் பண்டங்களை மாற்றிக்கொள்ள, அது உதவி புரிகிறது.

மிடாஸ் என்ற மன்னனிடம் ஏராளமான தங்கம் இருந்தது; ஆனால் தின்ன ஒன்றுமே இல்லை. இந்தக் கதையை அறிவீர்கள். ஆகையால் நமக்குத் தேவையான பொருளை வாங்க அது உபயோகப் படாவிட்டால், அந்தப் பணத்தால் பயனில்லை

— பண்டித ஜவஹர்லால் நேரு

உயிரோடு இருப்பதற்காக, அமைதியாக வாழ்வதற்காக, நாம் இரும்புச் சங்கிலிகளையும், அடிமைத் தனத்தையும் வாங்கிக்கொண்டு விடுகிறோம். உயிர் என்ன அவ்வளவு விலை மதிப்புள்ளதா? அமைதி என்ன அவ்வளவு இனிமையானதா? மற்றவர்கள் எப்படிவேண்டுமானாலும் செய்யட்டும்; என்னைப் பொறுத்தமட்டில் கடவுளே! எனக்கு, ஒன்று சுதந்தரத்தையாவது கொடு; அல்லது மரணத்தையாவது கொடு.

— ஹென்ரி பாட்ரிக்

தெய்வலோகத்தில் என்னைச் சிறைப்படுத்தி வைத்திருந்தாலும், அதை நான் விரும்பமாட்டேன். என்னுடைய சுதந்தரத்துக்காக, அந்தத் தெய்வலோகச் சிறையின் பளிங்குச் சுவர்களைத் தாண்டியோடவே விரும்புவேன்.

— ஜான் ட்ரைட்ன்

தனிப்பட்ட ஒரு மனிதனுக்கு எப்படித் தேகாரோக்கியம் இன்றியமையாததோ அதேபோல, ஒரு ஜன சமுதாயத்துக்குச் சுதந்தரம் இன்றியமையாதது. தேகாரோக்கியமில்லாத மனிதன் சுகத்தை அனுபவிக்கமுடியாது. அப்படியே சுதந்தரமில்லாத ஜனங்கள் இன்பத்தை நுகரமுடியாது.

— எட்மண்ட் பர்க்.

ஒருவனிடம் அதிகாரம் இருக்கிறபொழுது, அவனது உண்மையான குணம் வெளியாகிவிடும்.

— பிட்டாகஸ்

முட்டாள் தன் மனதிலுள்ளதையெல்லாம் கொட்டிவிடுவான்; புத்திசாலி அப்படிச் செய்வதில்லை.

— சாலோமன்

ஒரு போர் வீரன், யுத்தகளத்தில், தான் யுத்தம் செய்வது சரியா, தவறுவென்று சிந்திப்பானேயாகில், அச்சிந்தனையே அவனது தோல்விக்கு அறிகுறி.

— ஷேக்ஸ்பியர்

உலகத்திலே, சிரசில் ராஜமுடியில்லாத— ஆனல், முகத்தில் ராஜகளை நிறைந்த சில மகான்கள் இருக்கிறார்கள்.

— பேட்டன்

உண்மையற்ற ஒரு கொடிய லேவாதேவிக்காரனிடம ஒருவன் வாங்குகின்ற கடன், அவனது உடலையும், உயிரையும் லேவாதேவிக்காரனிடமே ஒப்படைக்கும் அளவில் நாளுக்கு நாள் வளர்ந்துவிடுகிறது.

— ஜார்ஜ் எலியட்

ஏணியின் மேல் படியை அடையவேண்டுமானல் அதன் கீழ்ப்படியிலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். வாழ்க்கையிலும் அப்படித்தான்.

— பைத்தா கோரஸ்

மனித வாழ்க்கையில் முப்பது வருடத்திற்கொரு தடவை புரட்சி வந்தேதீரும். சிலசமயம் அது வேகமானதாகவும் இருக்கும்; எனினும் அளவு கடந்த வேகத்தில் ஒரு சமூகத்தில் புரட்சியுண்டானால் அது சமூக அமைப்பின் அஸ்திவாரத்தை அசைத்து விடக்கூடும்; புரட்சித் தலைவர்கள் ஜாக்கிரதையாக இருந்து புரட்சியை நடத்தவேண்டும்.

— லாயிட் ஜார்ஜ்

புரட்சி வேலையில் துன்பம் நெருங்கி வரும் காலத்தில் புரட்சித் தலைவர்கள் நம்பிக்கையை இழத்தல் கூடாது. வீண் மனத் தொல்லைகளுக்கும் இடங்கொடுத்தல் கூடாது. நியாயமும் நெறியும் கொண்டு மக்களுக்குத் துன்பம் உண்டாகாதவண்ணம் புரட்சி வேலையை அமைதியுடனும் சத்தியத்துடனும் நடத்துபவனே வெற்றிபெறுவான். அந்தப் புரட்சிதான் மக்களுக்கு நீடித்த நன்மை பயக்கும்.

— பெர்ட்ரண்டு ரஸ்ஸல்

நியாயத்தை மறுத்து வாக்குவாதம் செய்வதில் ஒருவாரம் இனிமையாயிருக்கும். ஒரு மாதம்வரை சிரித்து மகிழலாம். அதற்குமேல் வாதம் தோல்வியுற்று நியாயம்தான் தலையெடுக்கும். நியாயத்தை மறுத்தவன், மனித சமூகம் தோன்றிய காலமுதல் வெற்றிபெற்றதில்லை. அவனுக்குக் கிடைக்கும் பலன் அபகீர்த்தியும், அவச்சொல்லும்தான்.

— எட்வர்டு பார்க்கர்

உண்மையை மறைக்க யாரால் முடியும்? சூரியனைக் கைகொண்டு பொத்தி மறைத்துவிட முடியுமா? உண்மை வழியைப் புறக்கணித்துப் புரட்சி இயக்கத்தை நடத்தித் தோல்வியுற்றவர்களின் சோகக் கதை பல தேச சரித்திரங்களில் விரித்து எழுதப்பெற்றிருக்கிறது. புரட்சித் தலைவர்கள் எச்சரிக்கையாய் இருப்பதற்கு அஃதொன்று போதாதா?

— தாமஸ் பெயின்

உலகில் அதர்மம் செய்பவர்களே அதிகார். அவர்களே டாம்பீகம் செய்பவர்கள். பகல் வெளிச்சம் போடுபவர்களும் அவர்களே. அவர்களிடம் மக்கள் உஷாராக இருத்தல்வேண்டும்.

— நீயோகிளிஸ்

உண்மையான மனிதனே வீரன். அவனிடத்தில்தான் தான தர்மம் குடியிருக்கும். அவன் பிறரைத் தூஷிப்பதில்லை. பிறரைக் கெடுக்கச் சூதும் வாதும் செய்வதில்லை. அவனே நாட்டுத் தொண்டன். கடவுள் தொண்டனும் அவன்தான்.

— நெப்போலியன்

மனிதனே! பதினாயிர வருஷங்கள் உயிரோடிருக்கப்போவதாக நினைத்து இருமாந்திராதே. உனது கடமையை தினசரி செய்துவிடு. இறைவனை வணங்கு. பரோபகாரமே இந்தச் சரீரம் எடுத்ததின் லட்சியமென்று நினைத்து, உன்னைக்காட்டிலும் எளியவருக்குத் தொண்டுசெய்.

— ஔரேலியஸ்

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம். தன்மை அளவுகடந்தால் போக்கிரித்தனம். சுயநலம் கொண்டவன் கடைசியில் உருப்பட்டதில்லை. எந்த தேசத்தவருக்கும் இது பொருந்தும்.

— ராஜாஜி

நல்ல வழியிருக்க அல்லல் வழி நினைத்து நாடுவது அயோக்கியர்களின் செயல். மேற்படியார்களே நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை. அவர்களே தேசத் துரோகிகளாகவும் ஆய்விடுகிறார்கள்.

— நாமக்கல் கவிஞர்

மது குடிப்பவன் முதலில் அறிஞன். பின்னர் முட்டாள்; இறுதியில் மிருகம்தான்.

— ஷேக்ஸ்பியர்

பெரிய விஷயங்களை உருவாக்குவது சிறிய விஷயங்களே.

— காந்தியடிகள்

அதிகமாகச் சிந்தியுங்கள். குறைவாகப் பேசுங்கள். மனிதர்களைப்போல் நடந்துகாட்டுங்கள்.

— லாலா லஜபதிராய்

இந்தியா வாழ்ந்தால் யார் வாழாதவர்? இந்தியா மடிந்தால் யார் வாழ்பவர்?

— சத்தியமூர்த்தி

திலக மகரிஷியின் கதை பாடும்போது சிதம்பரம்பிள்ளை வந்து சுதிபோடும்.

— நாமக்கல் கவிஞர்

தேச சேவையே மனிதசேவைக்கு வழி.

— காந்தியடிகள்

மனிதன் ஹிருதயம் ஊமையாக இருந்தா லன்றிக் கடவுள் செவிடாக இருப்பதில்லை.

— குலாம்ஸ்

பிறிதொரு மதமெனப் பெண்மையைக் கெடுப் பதும் பேய் செய்யுமோ.

— நாமக்கல் கவிஞர்

சாவைக் கண்டு பயப்படாதீர்கள். அது நான் உயிர்களுக்குச் சிறந்த நண்பன்.

— ராஜாஜி

கடவுள் பக்தன் யார்? புகழையும் இகழையும் பொருட்படுத்தாதவனே.

— காந்தியடிகள்

இம்சை புரிந்தவர்கள் அந்த இம்சையினாலேயே அழிவர். இதில் சம்சயமில்லை.

— நாமக்கல் கவிஞர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும். தெய்வம் உண்மையென்று தானறிதல்வேணும்.

— பாரதியார்

மானபங்கத்தில் மரணத்தை ஏற்கும் பெண்ணை மனிதர்களும் தேவர்களும் போற்றுவார்கள்.

— டிக்குன்ஸ்

பட்டங்களையும், பதவிகளையும் பெறுவது பெருமையன்று. அவைகளைப் பெறத் தகுதியாக்கிக் கொள்வதுதான் பெருமை.

— அரிஸ்டோடில்

அறிஞர்கள் எப்பொழுதும் எளிய வாழ்வை வாழ்வார். அற்பர்கள் எப்பொழுதும் பெரிய டாம்பீக வாழ்வைக் கடைப்பிடிப்பார்.

— நேரு

மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று ஒருவனுக்கு ஆசையிருந்தால்மட்டும் போதாது. நிறைவேற்றுவதற்கு மன உறுதி வேண்டும்.

— மாஜினி

அறிவை விலைக்கு வாங்கலாம். ஆனால், அன்பை நாம் விலைக்கு வாங்கமுடியாது. அது சந்தைக்கும் வருவதில்லை.

— லவல்

எப்போதும் பெரியோர் பேச்சு அறிவைத் தரும், பெரியோர் மௌனம் அன்பைப் பெருக்கும். ஆகவே பெரியோருக்குப் பணி செய்தலே பெருங் கடமை.

— ஃகதே

குற்றத்தை ஒப்புக்கொண்டவனை உடனே மன்னிக்கவேண்டும். மன்னிக்கத் தெரியாதவன் மனிதனல்லன். மன்னிக்கத் தெரியாத அன்பு குறைந்த அன்பேயாகும்.

— ஹக்ஸ்லி

மெய்யான கல்விதான் அடக்கந்தரும். ஆனால் பொய்யான கல்வியோ பெருமை பேசும்.

— ரஸ்கின்

எவன் வீரன்? யுத்தகாலத்தில் ஒரு லக்ஷம் பேரைக் காப்பாற்றிவிட்டதால், அவன் உண்மை வீரனாகிவிடமாட்டான். எவன் ஒருவன் தன்னடக்கம் பெற்றுத் தன்னைத்தானே ஜெயிக்கிறானோ அவனே தான் சிறந்தவீரன்.

— சுசிலாநாயர்

அறிவு அதிகமாக இருந்து நம்பிக்கை குறைவாக இருந்தால் சூதும் தூர் எண்ணமும் அதிகமாயிருக்கும்.

— புத்தபகவான்

ஒருவனுக்குச் சிநேகத் தன்மையும், இரக்கமும், வள்ளன்மையும், பிறவியிலேயே அமைதல் வேண்டும்.

— ஔவையார்

கருப்பையிலும் முட்டையிலும் இருக்கும் உயிர்களுக்கும், கல்லினுள் இருக்கும் தேரைக்கும் கடவுள் உணவு கொடுத்துக் காப்பாற்றுகிறார்.

— அதிகமான்

பெண்களுக்கு இனியன கூறலும், பாவலர்க்கு வழிபாடாற்றலும், அறிவுடைமையாம்.

— ஒப்பிலாமணிப்புலவர்

கொடையாளி இரவலருக்குத் தாய் தந்தையராகவும், ஆசிரியனாகவும், கடவுளாகவும் இருக்கின்றான்.

— இரட்டையர்

உடன் பிறந்தார்களின் ஒற்றுமைக்கு, ஒரு வயிற்றிற் பிறவாது உடன் பிறந்தாராகிய ராமனையும், பரதனையும் எண்ணிப்பாருங்கள்.

— வதுரங்கராமபாண்டியர்

பொய்யரிடம் கூறும் பொய் வெற்றியையும், மெய்யரிடம் கூறும் பொய் வறுமையையும், பெற்றோரிடம் கூறும் பொய் நோயையும், ஆசிரியரிடம் கூறும் பொய் நரகத்தையும் தரும்.

— அரவிந்தக்கவி வீரராகவ முதலியார்

மூர்க்கர்களுக்கு எவ்வளவு அறவுரைகளை எடுத்துச் சொன்னாலும், அவர்களுக்கு நல்ல குணம் வராது.

— படிக்காசுத் தம்பிரான்

நாம் எடுத்த பிறப்புக்கள் அனைத்திலும் குடித்த தாய்ப்பால் ஏழு கடலுக்கும் மேற்பட்டது.

— பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

சிறந்த பெரியார்களின் துணையைப் பெற்றுப், பேதமையை அகற்றி, வாழ்வை நடத்துக.

— ஔவையார்

நிறைந்த சிறப்பும், பொருளும், பெருமையும் உடைய மக்கள், கருமச் சத்திரத்தை அடைந்து இரக்க நேரினும் நேரலாம்.

— அதிவீரராமபாண்டியர்

பிறருக்கு உபயோகமற்ற கடல் நீரை, வாயுவானது தன்னிடத்தே ஏற்று, பிறருக்கு மழையாகப் பெய்வித்து உபயோகமாகச் செய்தல்போல, பிறருக்கு உதவி செய்யாதவர்களிடம் உள்ள பெருஞ் செல்வத்தை, ஏனைய பெரியவர்கள் பிறருக்கு உதவியாகும்படி செய்வார்கள்.

— சிவப்பிரகாச சுவாமிகள்

ஈக்குத் தலையிலும், தேளுக்குக் கொடுக்கிலும், பாம்புக்குப் பல்லிலும், விஷம் அடங்கியிருக்கும். துஷ்டர்களுக்கோ உடல் முழுதுமே விஷம் அடங்கி இருக்கும்.

— நீதிவெண்பா

நட்புடையவர்களைப் பிரித்தலும், பகைமை உண்டுபண்ணுதலும், ஒற்றர்களை இகழ்தலும், பக்கத்துள்ளவர்களையெல்லாம ஐயுறுதலும், பெரியோர்களின் அறவுரையைப் பழித்தலும், நற்குணங்களினின்று பிறழ்ந்து நடத்தலும், ஒருவனுக்கு வரவிருக்கும் கெடுநிலையை உணர்த்தும் குறிகளாகும்.

— குமரகுருபரர்

பழம் பெருமைகளைப் பற்றித் தம்மவர்களுக்குள்ளே பேசிப் பெருமையடைவதால் ஏற்படும் பயன் ஒன்றுமில்லை.

— பாரதியார்

தினையளவு நன்றி செய்யினும், அதன் பயனை அறிந்த பெரியவர்கள், பனை அளவாக மதிப்பார்கள்.

— திருவள்ளுவர்

உங்களது உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்செனத் ஒதுக்குக. அதில் உயிரில்லை. அது உண்மையாக ஒண்ணாது.

— விவேகாநந்தர்

மிக்க தீரமும், போற்றலும், அளவிலா ஊக்கமும் நமக்கு வேண்டும். சிங்கத்தின் தீரமுள்ள செயலாளனையே இலக்குமி நாடுவாள்.

இயற்கைக்கு அப்பாற் கிளம்பிப் போராடிக் கொண்டிருக்குமளவும் மனிதன் மனிதனாகிறான். இவ்வியற்கை அகம், புறம் இரண்டுமாகும். புற இயற்கையை வெல்வது நன்மையும் மிக்க பெருமையுமுடையதாகும். ஆனால் அக இயற்கையை வெல்வதோ அதனினும் பெருமையுடைத்தாம்.

— விவேகாநந்தர்

சிறந்த வாழ்க்கையை விரும்புபவர்கள் உழவுத் தொழிலைப்பேணி வளர்க்க வேண்டும்.

திரைகடலோடியாவது செல்வம் சேகரிக்க வேண்டும். செல்வத்தைக் கேடாமலும், வருவாயின்றியும், செலவு செய்துகொண்டே இருந்தால் பின்பு அது வருத்தத்தில் ஆழ்த்திவிடும்.

— ஔவையார்

மனத்திற்கு அடிமையாகாதே! தேடிய பொருளை அறவழியிற் செலவழியாது புதைத்துவிடாதே! இனத்தைத் தேடி மனத்தை வருத்திக்கொள்ளாதே!

— உலகநாதர்

வறுமையிலும் செம்மையுடையவனாக இரு! கற்றுணர்ந்தடங்கிய அறிஞனாக வாழ்வாயாக!

— அதிவீரராமபாண்டியன்

கற்றுணர்ந்தடங்கிய பெரியவர்களை, அறிவில்லாத, எளியவர்களென்றெண்ணி அவர்களுடன் வாதாடாதே. அவர்கள் ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்கின்ற கொக்கின் இயல்புடையவர்கள்.

— ஔவையார்

மெய்யில் விழுகின்ற கோலடியை கையானது விரைந்து சென்று தாங்கிக் கொள்ளுதல் போல, பிறருடைய துயரங்களை பெரிய அறிஞர்கள் தமது துயரமாக ஏற்றுக்கொள்ளுவார்கள்.

— சிவப்பிரகாச சுவாமிகள்

குளத்தில் நீர் வற்றியவுடனே, அக்குளத்தைத் விட்டு வேறு இடத்தை நாடுகின்ற நீர்ப் பறவைகளைப்போல ஒருவருக்குத் துன்பம் நேர்ந்தவிடத்து அவரை விட்டுப் பிரிந்துவிடும் இயல்புள்ளவர்கள் நட்புடையாராகார். குளத்தில் நீர் வற்றிய காலத்தும் அக்குளத்தினின்றும் பிரியாமல் நீரை ஒட்டியே வாழ்கின்ற கொட்டி ஆம்பல் நெய்தல் முதலியவற்றைப்போல ஒருவருக்குத் துன்பம் வந்தவிடத்தும் அவரைவிட்டுப் பிரியாதவர்களே நல்ல நட்புடையவராவார்கள்.

— ஔவையார்

கண் இரண்டும் ஒரே சமயத்தில் ஒரே இடத்தை உற்றுநோக்குவது போலவே, கணவனும் மனைவியும் ஒரே நோக்குடையவர்களாக, நல்லவற்றையே குறிக் கோளாகக் கொண்டு வாழ்வை நடத்தவேண்டும்

— சிவப்பிரகாச சுவாமிகள்

வஞ்சனையால் பெரும் பணி எதனையும் ஆற்ற இயலாது. அன்பாலும் உண்மை நாடும் பேரவா வாலும், மிக்க பெரும் சக்தியாலும்தான் பெரும் காரியங்கள் யாவும் நிறைவேறுகின்றன.

— விவேகாநந்தர்

புலியினது நகமும், கவரிமானது மயிரும், யானையின் தந்தமும், தன் நிலையினின்று நீங்கினாலும் மதிப்புடையனவாகவே இருக்கின்றன. அதே போல உண்மையான பெரியார்களின் நிலை, வேறுபடினும் என்றும் மதிப்புடையவர்களாகவே இருப் பார்கள்.

— நீதிவெண்பா

உடம்பு என்றேனும் அழியக்கூடியது என்பதை யும், கிழான தன்மையுடையதென்பதையும் அறிஞர் கள் அறிந்து, நீரிலுள்ள தாமரையைப்போல வாழ்க் கையில பற்றற்றவராக இருப்பார்கள்.

— ஔவையார்

உயர்ந்தவர்களிடத்துள்ள செல்வம் பொதுமகளிரைப்போல அனைவருக்கும் பயனுடையதாக வும், தீதறியாத நற்குணத்தவருடைய செல்வம்

குலமகளிரைப்போலக் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் பயன் படுவதாகவும், கீழான குணம் படைத்தாரின் செல்வம், விலைப் பெண்களைப் போல ஒருவருக்கும் பயன்படாததாகவும் இருக்கும்.

— குமரகுருபர அடிகள்

கருமங்கள் செய்யாது தேடிக் காத்து வைத்திருப்பவர்களின் பொருளைக் கொடியவர்கள் அபகரித்துக்கொள்வார்கள்.

— ஔவையார்

ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்ததின் பின் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கவேண்டும். அவ்வாறின்றி ஒரு காரியத்தைத் தொடங்கிவிட்டுப் பிறகு சிந்திப்பது கேடாகவே முடியும்.

— திருவள்ளுவர்

நற்குண நற்செய்கைகள் இல்லாதவருடன் பழகுதலும், சற்றும் அச்சமின்றிப் பெரியவர்களுக்கு எதிராகத்தான் மட்டும் தனிமையாக ஒரு காரியத்தைச் செய்ய முயலுவதும் நம்மை அடுத்தவரைக் கெடுக்க நினைத்தலும் வேண்டாதனவைகளாம்

— உலகநாதர்

அரசர்களுக்கு நீதிநெறிவழுவாது அரசு செய்வதும், வணிகர்களுக்கு என்றும் அழியாமல் மென்மேலும் வளர்கின்ற பொருளை (நியாயமான வழியில்) சேகரிப்பதும் உழவர்களுக்கு உழுதுண்டு வாழ்வதை விரும்பிக் காப்பதும் அழகுதருவனவாம்.

— அதிவீரராம பாண்டியர்

நல்லவர்களுக்குச் செய்த உபகாரம் கல்லிற் பொறித்த எழுத்துக்கும், நன்றி இல்லாதவர்களுக்குச் செய்த உபகாரம் நீரில் எழுதிய எழுத்துக்கும் ஒப்பாகும்.

— ஔவையார்

மெய் வலிமையூட்டும். மெய் தூய்மையாக்கும். மெய் எல்லா அறிவுமாகும்.

— விவேகானந்தர்

ஒருபோது உண்பவனை யோகி எனவும், இருவேளை உண்பவனை போகி எனவும், மும்முறை உண்பவனை ரோகி எனவும் சொல்லவேண்டும்.

— நீதிவெண்பா

சொல்வன்மை இல்லாதவன்பால், அவன் சொல்லுகின்ற மெய் பொய்யாகவும், சொல்வன்மை உள்ளவன்பால் அவன் சொல்லும் பொய்யும் மெய்யாகவும் ஆகிவிடுகிறது.

— அதிவீரராமபாண்டியர்

கல்வி அறிவில்லாதவர்களுக்குக், கற்றுணர்ந்தவர்களின் சொற்களும், பாவிகளுக்கு அறமும், வாழை மரத்திற்கு அதனிடத்துத் தோன்றும் காயும் வீட்டிற்குப் பொருந்திய ஒழுக்கமில்லாத பெண்ணும் எமனுவர்.

— ஔவையார்

செங்கோல் தவறிய மன்னருக்கு அறமே கூற்றுவனுவதும், புகழ்மிக்க கற்புடைய சிலையை உயர்ந்தோர் பாராட்டுவதும் முன்னை உருக்கொண்டு வந்து இப்பிறப்பில் பயன் தருவதும் உண்மைகளாகும்.

— இளங்கோவடிகள்

இடம், பொருள், ஏவல் முதலியனவும் அன்பும் வறியவனுக்கு வாய்த்தாலும் அவற்றால் பயனில்லை. ஊமையரைச் சார்ந்த கலையறிவும், குருடரைச் சார்ந்த விளக்கொளியும் பயனைத் தரமுடியுமா?

— சிவப்பிரகாசர்

வானத்திலிருந்து மழைத்துளி விழுந்தாலன்றி நிலத்தில் சிறு புல்லையும் காணமுடியாது.

— திருவள்ளுவர்

ஐம்புலன்களாகிய யானைகளை ஞானமாகிய கயிறு கொண்டு, சிந்தனையாகிய தூணிற் கட்டுபவர்கள் இம்மையிற் புகழும், மறுமையில் உயர்கதியும் அடைவார்கள்.

— மூலைப்பாடியார்.

"திறமைசாலி" என்றால் பிறரைச் சுலபமாக ஏமாற்றத் தெரிந்தவன் என்று பொருள். "அப்பாவி" என்பதற்கு மோசடி செய்யத் துணிவற்ற மூடன் என்றுதான் அர்த்தம்.

— ஜான்உட்

இரக்கம் மனச்சாட்சி என்பவை சிறிதேனும் உள்ள எவனும் ஏழை மக்களின் மத்தியிலே சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டு வாழமுடியுமா? பக்கத்துவீட்டுக் குழந்தைக்குப் பால் இல்லாத போது பாலிற் குளிக்கவோ, நாய்க்குட்டிகளுக்குப் பால் வார்க்கவோ யாருக்காவது மனம் வருமா?

— டால்ஸ்டாய்

எதிர்கால ஞானம் மழுங்கியகால் மனிதனுக்கு மனிதன் அடிமையானான்: அவனிடம் விலைமதிப் பற்ற இரத்தினங்கள் (தன்னுரிமைகள்) இருந்தன. அவற்றையெல்லாம் சகனிடம் அடகு வைத்துவிட்டான். ஆம், நாய்களைவிட அவன் கீழான பிறவியாகிவிட் டான். (ஏனெனில்) ஒரு நாய்கூட மற்றொரு நாய்க்கு அடிபணிவதில்லை.

— கவிஞர் இக்பால்

முயலைத் தேடி அலையும் வேட்டை நாயைப் போல் பதவியைப் பிடிக்க மனிதன் அலைகிறான். எத்தனை முயல்கள் கிடைத்தாலும் வேட்டைநாய் பிடித்துத் தீர்த்துவிடும். மனிதனும் அப்படித்தான். எத்தனைப் பதவிகள் கிடைத்தாலும் பிடித்துக் கொள்வான். அத்தனைப் பதவிகளையும் தன்னால் நிர்வகிக்க முடியுமா என்பதைப்பற்றி யாரும் சிந் திப்பதேயில்லை,

— மன்ரோ

தமிழா! நீ என்றைக்கும் தாழ்ந்தவனல்ல. உன்னிடம் எள்ளளவும் எவ்வித வேற்றுமையும் உண் டாக முடியாதே! என்றும் தன் மானம் தாழாத எழிலுடையத் தமிழன் அல்லவோ நீ. ஒரு மயிர் உதிர்ந்தாலும் உயிர் வாழ விரும்பாத கவரிமானை யொத்த உரியவனல்லவோ நீ. இத்தகைய சிறப் புகள் உன்பால் இயற்கையாகவே உண்டாகியிருக்க நீ இன்று சீர்குலைந்து போவதென்னோ?

— தவசி

மக்களின் அபிவிருத்திக்காக நாம் செய்தாக வேண்டிய காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதிக துயரங்களை அனுபவித்துக்கொண்டு வருகிற வர்கள் இந்தப் பொது மக்கள்தான். கட்டத் துணி, உண்ணச் சோறு, இருக்க வீடு ஆகியவற்றில் உலகி லேயே மிகமிக மோசமான நிலையில் இருப்பவர்கள் இவர்களே.

இவர்களுக்குச் சேவை செய்வது என்பதி லேயே நாம் நமது உன்னத நிலையை அடைந்தாக வேண்டும். இவர்களுக்குச் சேவை செய்வதே தாய் நாட்டுக்குச் செய்யும் சேவை; கடவுள் சேவையும் அதுதான்.

— ஓமந்தூர் பி. ராமசாமிரெட்டியார்

நாம் துவேஷம் என்கிற ஜம்பத்தை முதலில் அகற்றவேண்டும். உண்மையில துவேஷத்திலும் அதிலிருந்து கிளைக்கும் ஏற்பாடுகளிலும் ஜம்பத் தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. பழங்கால சரித்திரத்தை பொழுதுபோக்குக்காக மட்டும் படிக் காமல் சிரத்தையுடன் படித்தோமானால் இதைத் தெரிந்துகொள்ளலாம.

சுதந்திரத்தோடு இருப்பதென்பது ஒரு சங்கர்ப் பம்; அவ்வளவுதான். பொது வாழ்க்கையில் அந்தரங்க சுத்தியும் ஆக்க வேலையில் சுருசுருப்பும் இருந்தால்தான் நிர்மாண வேலை நடக்கும். அவைவ களால்தான் நாம் இழந்துவிட்ட காலத்துக்கு ஈடு தேடி நமது நாட்டின் சக்தியையும் மேன்மையையும் விளக்கமுடியும்.

— ராஜாஜி

மகாத்மா காந்தி நமக்குப் போதித்துள்ள போதனைகளையும் இலட்சியங்களையும் மறந்தோமானால் அப்புறம் நமது பணியையும் நமது நாட்டையும் கைவிட்டவர்களாவோம்.

— பண்டித ஜவஹர்லால்நேரு

தன்னையோ, பகைவனையோ மிருகமாக்கிவிட இந்தியா மறுத்துவிட்டது. தன்னிலே தவறாத தார்மீகப் போரின் வெற்றியால் தனக்கு மட்டுமின்றி தன் பகைவனுக்கும் இந்தியா கீர்த்தியைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறது.

— டாக்டர், பட்டாபி சீதாராமய்யா

நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் சிறந்து வாழ்ந்து வழிகாட்டிய இன்பப் பேற்றின் சிகரமே நமது காந்தியடிகள்.

— S. இராமசாமிநாயுடு.

சமத்துவம் வேண்டுமென்று அகில உலகிலும் ஆவேசமாகக் கோரப்படுகிறது. புதிய இந்தியாவிலும் அக்கோரிக்கை பலமான ஆதரவு பெறலாம். ஆனால் ஒன்று மாத்திரம் கூறவிரும்புகிறேன். சமத்துவத்திற்கு இரு வழிகள் உண்டு. ஒன்று மேலிருப்பவரைக் கீழே இறக்கிச் சமத்துவப்படுத்துவது. இன்னொன்று கீழே இருப்போரை மேலே உயர்த்திச் சமத்துவப்படுத்துவது. கீழே இறக்குவது எளிது ஆனால் கஷ்டமாயிருந்தாலும்கூட கீழே இருப்பவரை மேலேற்றுவதுதான் மிக உயர்ந்தது.

—நீதிபதி பி. வி. இராஜமன்னார்.

தியாகிகளின் உதிரமின்றி சுதந்திரக் கோயில் கட்டமுடியாது. 'எங்கே துன்பம் இருக்கின்றதோ' அங்கே பேரின்ப வீடு இருக்கின்றது.

— ஆஸ்கார் ஒயில்ட்

நாம் எதை வேண்டுமாயினும் இழந்துவிடலாம். ஆனால், நாம் நமது கௌரவத்தை இழக்க நாம் இடந்தருதல் கூடாது.

— லக்ராத்

விளைப்பவன் ஒருவன்; துய்ப்பவன் ஒருவனே! உழைப்பவன் வருந்துகிறான்; உழையாது உண்பவன் அதிகாரம் செலுத்துகிறான். தொழிலாளிக்குத் துயரும் பட்டினியுமாகவே விடிகிறது. முதலாளி மேனி குலுங்காது வயிறு வாடாது சுகிக்கிறான். முதலாளியும் உழைப்பாளியாக மாறவேண்டும். உழைப்பாளி நன்கு உண்ணவேண்டும்; உழைப்பின் பலன் உழைப்பவனுக்கே சேரவேண்டும்.

— சுத்தானந்த பாரதியார்

ஆசியாக் கண்டத்திற்கு உலகம் அறிவுக் கடன் பட்டிருக்கிறது, ஏனெனில் அது உலகத்தின் பெரிய மதங்களாகிய இந்து, கிருஸ்தவ, இஸ்லாம், புத்தமதங்கள் நான்கையும் பெற்று உலகிற்குக் கடன் கொடுத்திருக்கிறது.

— ஆராய்ச்சியாளன்

தற்பெருமை உள்ளவர்களிடம்தான் கொடுமை குடிகொண்டிருக்கும்.

— ஹாமில்டன் மைப்

பரோபகார எண்ணம் படைத்த ஒருவன் தன் சுகத்தைப் பெரிதும் கருதான். ஆனால் உள்ளே ஒரு நினைவை வைத்துக்கொண்டு வெளிக்காக வாயளவில் பேசுதல் பரோபகாரமாகாது.

— திரு. வி. க.

வருந்திப் படித்த நூல்களைத் துருவி ஆராய்ந்து தெளிய முயலாது, புதிது புதிதாகப் படிக்க முயலுதல், கையிலிருக்கும் பொருளை வீணே இறைத்துவிட்டுப் புதுப் பொருள் சேகரிப்பது அரிப் பரித்தலை ஒக்கும்.

— குமரகுருபரர்

உம்மால் ஒருவர்க்கும் உதவி செய்ய இயலாது; பணிசெய்யமட்டும் உமக்கு இயலும்.

— விவேகானந்தர்

அறிஞர்களுக்குக் கற்றுணர்ந்தடங்கலும், வறியோர்களுக்கு செம்மையுற வாழ்தலும் அழகு தருவனவாம்.

கல்வி அறிவில்லாத ஒருவன் தனது குலத்தின் பண்டைப் பெருமையைப் பறைசாற்றித் திரிவானாயின் அவன் நெல்லோடு பிறக்கின்ற பதருக்கு ஒப்பாவான்.

— அதிவீரராமபாண்டியர்

ஔவைப்பிராட்டியாரால்

சிறப்பிக்கப்பட்டது தேன்!

இராமலிங்க அடிகளால்

திருவருட்பாவில் கலந்தது தேன்!!

சுப்பிரமணிய பாரதியாரின்

நாட்டுப் பாடலில் பொலிவது தேன்!!!

★

தாய்க் குலத்திற்கும் வருங்காலச் சந்ததியாராகிய குழந்தைகளுக்கும்

K. V'S.

தாமரை மார்க்கு தேன்

நன்மை பல அளித்திடுதல் நிச்சயமே.

★

விபரங்களுக்கு:-

K. வீராசாமி, தேன் வியாபாரம்,

கோயமுத்தூர்.